Vol. 5, Issue-1, June 2021 P.No. : 14 - 19

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**முனைவர் ஆ.பிரபு,**

உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் – 635 601

---

**தலைப்பு :** திருப்பத்தூர் மாவட்டத்தில் புதிய கற்காலப் பாறை ஓவியங்கள், மனித வாழ்விடங்கள்

---

திருப்பத்தூர் மாவட்டம் கெஜல்நாயக்கன்பட்டியில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள **செல்லியம்மன் கொட்டாய்** என்ற இடத்தில் குகைகள் இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கே சென்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்குள்ள செல்லியம்மன் கோவிலில் வளாகத்தில் புதிய கற்காலக் கற்கோடாரிகள் வழிபாட்டில் இருப்பதைக் கண்டறியப்பட்டது. தொடர்ந்து அக்கோவிலும் எதிரே உள்ள **'தம்புரான் குன்று'** என்ற சிறிய குன்றில் அய்வு செய்தபோது அங்கு புதிய கற்கால மக்கள் வாழ்ந்த குகை ஒன்றும் கண்டறியப்பட்டது.




‘தம்பிரான்’ என்றால் தலைவன், இறைவன் என்று பொருள்படும். இக்குகையானது ஏறக்குறைய 10 பேர் வாழ ஏற்றதாக உள்ளது. இக்குகையின் ஒருபுறம் மூன்று சுனைகள் காணப்படுகின்றன. அவற்றில் கோடைக் காலங்களிலும் வற்றாமல் தண்ணீர் தேங்கி இருக்கின்றது. குகையின் உட்புறத்தில் வெள்ளை நிற ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மொத்தமாக ஐந்து ஓவியங்கள் இக்குகையின் மேற்புறத்தில் வரையப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று ஓவியங்கள் அழியாமல் முழுமையாக உள்ளன. அவற்றில் ஒன்று இருப்பிடத்தைக் குறிப்பதாகவோ அல்லது அக்கால மக்கள் பயன்படுத்திய விளக்கினைக் குறிப்பதாகவோ இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. அதனருகில் பிறைக்குறியீடு வரையப்பட்டுள்ளது. இவற்றை அடுத்துள்ள இரண்டு ஓவியங்கள் கட்டங்களாக வரையப்பட்டுள்ளன. ‘ஸ்வஸ்திக்’ குறியீடு போல உள்ள இவை சிதைந்த நிலையில் உள்ளன. இவற்றை அடுத்து வட்ட வடிவில் ஒரு ஓவியம் வரையபட்டுள்ளது. இது நிலவையோ, சூரியனையோ குறிப்பதாகக் கொள்ளலாம். இதனையடுத்து ஒரு மனித உருவம் வலது கையில் வில்லும் இடது கையில் அம்பும் ஏந்திய நிலையில் வரையப்பட்டுள்ளது.







இது வேட்டை நிகழ்வைக் குறிப்பதாகச் சிறப்பாக வரையப்பட்டுள்ளது. நடுகற்களில் வில்லும் அம்பும் ஏந்தியவாறு வடிக்கப்பட்டுள்ள வீரனின் உருவம் போல இந்த ஓவியம் இருப்பது சிறப்புக்குரியதாகும். மேலும் செல்லியம்மன் கோவிலுக்குப் பின் புறம் உள்ள ‘குகைக்குன்று’ என்ற சிறிய குன்றில் ஆறுக்கும் மேற்பட்ட இயற்கையான குகைகள் காணப்படுகின்றன.



இக்குகைகளையும் அக்கால மக்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதற்குச் சான்றாக குகை முகப்பில் வெள்ளை நிறத்தில் பறவை ஓவியம் ஒன்று வரையப்பட்டுள்ளது. வேட்டைச் சமூகமாக காடுகளில் வாழ்ந்த அக்கால மக்கள் வேட்டைப் பொருட்கள் மிகுதியாகக் கிடைக்கும் இடத்தினை அடையாளப்படுத்தும் நோக்கில் அங்கு ஓவியங்களாக வரையும் பழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இக்குகையில் காணப்படும் இப்பறவை அவ்வகையில் வரையப்பட்டதாகத் தெரிகின்றது. செல்லியம்மன் கொட்டாய் என்ற இடத்தில் கண்டறியப்பட்ட **இந்த ஓவியங்கள் புதிதாகக் கண்டறியப்பட்டவை என்பதை மூத்த தொல்லியல் ஆய்வறிஞரும் பேராசிரியருமான கா.ராஜன் அவர்கள் உறுதி செய்தார்.**

தொன்மையான ஓவியங்கள் உலகின் பல பகுதிகளில் இயற்கையாய் அமைந்துள்ள குகை மற்றும் பாறை ஒதுக்குகளில் கண்டறியப்பட்டுள்ளன. இந்தியாவில் பரவலான அனைத்து மாநிலங்களிலும் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதிக எண்ணிக்கையில் மத்தியபிரதேச மலைக் குன்றுகளில் காணப்படுகின்றன. அது போல தமிழகத்தில் பாறை ஓவியங்கள்

பெரும்பாலும் குறிஞ்சி மற்றும் முல்லை நிலப் பகுதிகளிலுள்ள மலைகளில் புதிய கற்காலம், பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றுக்கால ஓவியங்கள் காணக்கிடைகின்றன.

பழங்காலத்தில் மக்கள் பெரும்பாலும் இயற்கையான குகைத் தளங்களில் வாழ்ந்தனர். எனவே தாங்கள் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களை வரைந்தனர். குகைகளுக்கு அருகே இருந்த பாறைகளிலும் ஓவியங்களை வரைந்துள்ளனர். அக்கால மக்கள் தங்களது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளைப் பதிவு செய்ய வேண்டுமென்று எண்ணியதால் ஓவியங்களை வரைந்திருக்கலாம் அல்லது ஒரு இனக்குழு மக்கள் மற்றவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டுத் தமது அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்திருக்கலாம்.

அன்றைய மக்களுக்கு வேட்டையாடுதலே முக்கியத் தொழில். எனவே பல்வேறு மிருகங்களைத் தாம் வேட்டையாடுவது போல ஓவியங்களை வரைந்தால், வேட்டையாடும் போது அதிக மிருகங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், விலங்குகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் அவற்றை வரைந்திருக்கலாம். பெருங்கற்கால சின்னங்கள் மற்றும் பல பாறை ஓவியங்களில் உள்ள மனித உருவங்கள் பொதுவாக குச்சி வடிவில் காட்டப்பட்டுள்ளன. மனித உருவ வடிவங்களின் அடிப்படைக் கூறுகளை எளிமைப் படுத்தி கோட்டுருவமாக தேவைக்குத் தகுந்தாற் போல் மனித உருவங்கள் வரையப்பட்டு வந்துள்ளன. இக்குச்சி வடிவங்கள் கை, கால், உடல்களோடு வில், அம்பு, கேடயம் மற்றும் பிற ஆயுதங்களை தாங்கியிருப்பது போல அமைக்கப்பட்டுள்ளன.

உருவம், வண்ணம், ஆகியவற்றைக் கொண்டு ஓவியத்தின் காலம் கணிக்கப்படுவதுடன், ஓவியம் கிடைத்த இடத்தினருகில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளை வைத்தும் காலம் கணிக்கப்படுகிறது. மேலும் வண்ணக் கலவையினைச் சுரண்டி எடுத்து வேதியியல் ஆய்வகங்களில் வாயிலாகவும் காலம் கணிக்கப்படுகின்றது. வெள்ளை நிறம், சுண்ணாம்பு கல் அல்லது வெள்ளைக் களிமண், வெப்பாலை என்ற மரத்தின் பால் போன்றவற்றில் இருந்து எடுக்கப்படுகின்றது. செங்காவி வண்ணம் செம்மண் மற்றும் மூலிகைச் சாறுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டன. தமிழகத்தில் பாறை ஓவியங்களில் அதிக அளவில் வெள்ளை நிறமும் அதற்கு அடுத்த நிலையில் சிவப்பு நிறமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொன்மையான ஓவியங்கள் சிவப்பு நிறத்தில் உள்ளன. இருப்பினும் சிவப்பு மற்றும் வெள்ளை வண்ணங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

தமிழகத்தின் வட பகுதிகளில் நிறைய பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்ட போதும், திருப்பத்தூர் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்ட பின்னர் இம்மாவட்டத்தில் கண்டறியப்படும் முதல் பாறை ஓவியம் இதுவாகும். இம்மாவட்ட எல்லைகளுக்குள் உள்ள சில பாறை ஓவியங்களில் இதுவும் ஒன்றாகும். இந்நிலையில் செல்லியம்மன் கொட்டாயில் உள்ள குகைகளில் நெருப்பு மூட்டி கறி உணவுகள் சமைப்பது, மது அருந்துவது உள்ளிட்ட செயல்களால் இங்குள்ள பாறை ஓவியங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.

***தகவலாளர் :*** தென்னவன் – செல்லியம்மன் கொட்டாய்

***ஆய்வில் உதவி :*** முனைவர் இரா. சேகர், வரலாற்றியல் பேராசிரியர் (ஓய்வு)